அன்புடையீர்,

அன்பான, பணிவான வணக்கம்.

என்னுடைய பெயர் தி. ஸ்ரீதரன். நான் பூஜ்ய ரா. கணபதி அண்ணாவுக்குச் சில காலம் பணிவிடை புரிந்திருக்கிறேன்.

ரா. கணபதி அண்ணாவுக்குப் பணிவிடை புரிந்த சில அன்பர்களுடன் இணைந்து அண்ணாவின் நூல்கள் சிலவற்றை வெளியிடும் முயற்சியில் இருக்கிறேன். இந்த நூல்களை அண்ணாவின் நினைவு தினமாகிய சிவராத்திரியை ஒட்டி (பிப்ரவரி அல்லது மார்ச் 2025 இல்) வெளியிடத் தீர்மானித்திருக்கிறோம்.

அவற்றின் விவரம் பின்வருமாறு:

1. **தெய்வத்தின் குரல் – எட்டாம் பகுதி**
(ரா. கணபதி அண்ணாவால் தொகுக்கப்பட்ட பெரியவா
உரைகள், முந்தைய ஏழு பகுதிகளில் வெளியாகாதவை.)

2. **தினசரி பெரியவா தியானம்**
['தினசரி தியானம்' நூல் வடிவில் அமைந்துள்ளது.
366 X 2 பக்கங்கள் கொண்டது. (ஒரு தினத்துக்கு 2 பக்கங்கள்
வீதம்) ஒவ்வொரு தினத்துக்கும் ஒரு மகா பெரியவா புகைப்படம்
+ தெய்வத்தின் குரல் கருத்து ஒன்று இருக்கும்.
பாக்கெட் சைஸ் புத்தகம்]

3. **மைத்ரீ**
(மகா பெரியவாளின் அன்பை விளக்கும் சம்பவங்கள்.
இவை ரா. கணபதி அண்ணா எழுதிய நூல்களில் இருந்து
மட்டுமே தொகுக்கப்பட்டவை.)

4. **காஞ்சி முனிவர் நினைவுக் கதம்பம்**
(மகா பெரியவா பற்றி ரா. கணபதி அண்ணா எழுதிய நூல்.
அதிகம் பிரபலமாகவில்லை. பெரியவா பீடாதிபத்தியம் ஏற்றது

குறித்த சில உணர்ச்சி பூர்வமான செய்திகள், பெரியவாளின் கர-சரண மகிமைகள் குறித்தது.)

5. **பாரதிய சமுதாயக் கட்டமைப்பின் ஆணிவேர்**

(வர்ணாசிரம தர்மம் குறித்துப் பண்டிட் நேரு, மகா பெரியவா ஆகிய இருவரின் கருத்துகள். இவை இரண்டும் அன்பர்கள் பலரும் அறிந்திராத கட்டுரைகள். பவன்ஸ் ஜர்னல் பத்திரிகையில் வெளியானவை. இந்தக் கட்டுரைகளுடன் திரு. எஸ். குருமூர்த்தி வழங்கியுள்ள அறிமுக உரையைச் சேர்த்து இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

6. **நந்தவனத்தில் ஓர் ஆண்டி**

(ரா. கணபதி அண்ணா பற்றிய சில நினைவுகள்)

தற்போது 1000 பிரதிகள் மட்டுமே வெளியிட இருக்கிறோம்.

இந்த நூல்கள் அனைத்தும்

1. தற்கால உரைநடைக்கு மாற்றப்பட்டுள்ளன. எனவே, நம் காலத்து இளைய தலைமுறையினரும் இவற்றைப் படித்துப் புரிந்துகொள்வது எளிது.

2. தரமான காகிதத்தில் அச்சிடப்பட உள்ளன. மேலும், தெய்வத்தின் குரல் எட்டாம் பகுதி, தினசரி பெரியவா தியானம் ஆகிய இரு நூல்களும் கனமான அட்டை பைண்டிங் (hard bound) பண்ணப்பட உள்ளன.

தரமான காகிதம், அச்சு முதலிய காரணங்களால் புத்தக விலை மிக அதிகமாகிறது.

நாங்கள் இவற்றைக் குறைந்த விலையில் வெளியிட விரும்புகிறோம்.

எனவே, இந்த நூல் வெளியீட்டில் எங்களுக்குப் பொருளுதவி செய்ய முன்வருமாறு அன்புடன் வேண்டுகிறோம். தாங்கள் தரும் தொகை புத்தக விலையைக் குறைப்பதில் உதவியாக இருக்கும்.

இந்த விவரங்கள் பின்வருமாறு:

| **புத்தகத்தின் பெயர்** | **அடக்க விலை** | **ஸ்பான்ஸர் ஷிப்** | **விற் பனை விலை** |
|---|---|---|---|
| தெய்வத்தின் குரல் எட்டாம் பகுதி | 300 | 2 லட்சம் | 100 |
| தினசரி பெரியவா தியானம் | 250 | 1.5 லட்சம் | 100 |
| மைத்ரீ | 150 | 0.5 லட்சம் | 100 |
| காஞ்சி முனிவர் நினைவுக் கதம்பம் | 200 | 1 லட்சம் | 100 |
| பாரதிய சமுதாயக் கட்டமைப்பின் ஆணிவேர் | 80 | 0.5 லட்சம் | 30 |
| நந்தவனத்தில் ஓர் ஆண்டி | 150 | 0.5 லட்சம் | 100 |

மேலும்,

1. பொருளுதவி செய்பவர்களின் பெயர்கள் நூல்களின் இம்ப்ரின்ட் பக்கத்தில் வெளியிடப்படும்.

2. பொருளுதவி செய்யப்படும் புத்தகத்தின் 100 பிரதிகள் அவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

நன்றி. நமஸ்காரம்.

அன்புடன்,

தி. ஸ்ரீதரன்

**வேத ப்ரகாசனம்**

64 மதுரை சாமி மடம் தெரு, பெரம்பூர், சென்னை – 11.